# NTU மாணவர்களுக்கு கூகளின் AI கருவிகள் இலவசம்

seithi.mediacorp.sg/singapore/ntu-maanavarakalaukakau-kaukalaina-ai-karauvaikala-ilavacama-852046

[சிங்கப்பூர்]

வாசிப்புநேரம் -




Lim Li Ting/TODAY

Listen to article

1 min

நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழக மாணவர்கள் கூகளின் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தை விரைவில் இலவசமாகப் பயன்படுத்தமுடியும். இவ்வாண்டு ஆகஸ்ட் மாதத்திற்குள் அவர்கள் Gemini Enterprise, Google AI Studio, Vertex AI போன்ற கருவிகளைப் பயன்படுத்தமுடியும். செயற்கை நுண்ணறிவைக் கட்டமைப்பது, தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது, கற்றலை மெருகேற்றுவது போன்றவற்றுக்குக் கருவிகள் உதவும். தொழில்நுட்பம் சார்ந்த பொருளாதாரத்தில் மாணவர்கள் சிறந்து விளங்க உதவும் முயற்சியில் அது ஒருபகுதி. பல்கலையில் செயற்கை நுண்ணறிவை மையமாகக் கொண்டிருக்கும் பாடத்திட்டங்கள் தற்போது ஐந்து விழுக்காடு. 2030க்குள் அதனை 40 விழுக்காட்டுக்கு உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது. அதைக் கையாளும் வகையில் பாடத்திட்டங்கள் வடிவமைக்கப்படுகின்றன. கற்றுக்கொண்ட நுணுக்கங்கள் வேலைச் சந்தையில் நுழைந்த பின்னரும் மாணவர்களுக்குக் கைகொடுக்கும்; அவர்களின் உற்பத்தித்திறனை மேம்படுத்த உறுதுணையாக இருக்கும். அத்தகைய பெரிய அளவில் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தும் முதல் பல்கலை நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம்.

## விளம்பரம்

ஆதாரம் : CNA